


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 308 | 4 Pages | 3.6.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 308 | 4 பக்கங்கள் | 3.6.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்**

**விளக்கம்:**
**சினம் என்னும் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பு ஒருவனுக்கு இனம் இன்பத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.**

## அமெரிக்காவில் பெட்ரோல் குண்டு வீச்சு தாக்குதல்: 6 பேர் படுகாயம்




வாஷிங்டன், ஜூன் 3

அமெரிக்காவின் மாகாணம் பொல்டர் நகரில் பெர்ல் தெருவில் நேற்று அமைதி பேரணி நடைபெற்றது. காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினரின் பிடியில் உள்ள பணய கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி அமைதி பேரணி நடைபெற்றது. இந்த பேரணியில் அமெரிக்கா வாழ் இஸ்ரேலியர்கள், யூதர்கள், இஸ்ரேல் ஆதரவாளர்கள் என பலர் பங்கேற்றனர்.

இந்நிலையில், பேரணியின்போது திடீரென பெட்ரோல் குண்டுகளுடன் நுழைந்த நபர் அங்கிருந்தவர்கள் மீது குண்டுகளை வீசினார். இந்த தாக்குதல் சம்பவத்தில் பெட்ரோல் குண்டுகள் வெடித்து தீப்பற்றி எரிந்தன. இதில் பேரணியில் பங்கேற்ற 6 பேர் படுகாயமடைந்தனர். 'பாலஸ்தீனம் விடுதலை' என்ற கோஷம் எழுப்பிய நபர் இந்த தாக்குதலை நடத்தினார். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

மேலும், பெட்ரோல் குண்டு வீச்சு தாக்குதல் நடத்திய முகமது சுலைமான் (வயது 45) என்ற நபரை கைது செய்தனர். இது பயங்கரவாத தாக்குதல் என்று போலீசார் அறிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: ரிக்டர் அளவில் 6.0 ஆக பதிவு



டோக்கியோ, ஜூன் 3

ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் ஹோகைடோ தீவில் குஷிராநகரில் இருந்து 40 கிலோ மீட்டர் தூரத்தில் 17 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. இன்று அதிகாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 ஆக பதிவானது. சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்தன.

ஆனாலும், இந்த நிலநடுக்கத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

அதேவேளை, ஹோகைடோ தீவில் நேற்றும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6.1 ஆக அந்த நிலநடுக்கம் பதிவாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.






# பணிவுதான் தலைமைப் பண்பின் அடையாளம்.. : முதல்வர் மு.க.ஸ்டாலின்

மதுரை ஜூன் 3

தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

நான் மமதையில்பேசுகிறவன் அல்ல. "கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் எதிரிகளே இல்லை" என்று ஆணவக் குரலில் சொல்பவன் அல்ல! எந்தக் காலத்திலும் எனக்கு ஆணவமோ, மமதையோ வராது. என்னைப் பொறுத்தவரைக்கும், பணிவுதான் தலைமைப் பண்பின் அடையாளம்! சொல்லைவிட செயலே பெரிது! வரலாறு காணாத வெற்றியை நாம் பதிவு செய்வோம் என்று நான் சொல்வது, உங்கள் மேல்இருக்கும்நம்பிக்கையில்தான்.

பொதுக்குழுவுக்கு வராத, இரவு பகல் பார்க்காமல் வெயில் மழை பார்க்காமல் தனக்கு என்ன பயன் என்று பார்க்காம உழைக்கும், கோடிக்கணக்கான உடன்பிறப்புகளையும் நம்பித்தான் சொல்கிறேன். கழகம் இதுவரைக்கும் அடைந்த வெற்றிகளுக்கெல்லாம் நீங்கள்தான் காரணம்! உடன்பிறப்புகளான நீங்கள் இல்லாமல் கழகமும் இல்லை; நானும் இல்லை! என்னைத் தலைவராக உருவாக்கியது நீங்கள்! என்னை முதல் அமைச்சராக்கி உயர்வைத் தந்தது, நீங்களும் – மக்களும்! உலகத்தில் எந்தக் கட்சிக்கும், இப்படிப்பட்ட உறுதிமிக்க உழைப்பாளிகள் தொண்டர்களாக கிடைத்திருக்க மாட்டார்கள்!



சூரியன் நிரந்தரமானது. அதே போன்று கழகமும் நிரந்தரமானது. கழகம் எப்படி நிரந்தரமானதோ, அதேபோன்று கழக ஆட்சியும் நிரந்தரமானது என்ற நிலையை நாம் உருவாக்கவேண்டும்.

தி.மு.க. ஆட்சிக்கு எதிரான அலையைவிட, ஆதரவு அலை தான் அதிகமாக வீசுகிறது. அது வெளியே தெரியாமல் மறைக்க திசை திருப்ப சிலர் நினைக்கிறார்கள்.

கடந்த அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி ஆட்சியால், அதல பாதாளத்துக்கு சென்ற தமிழ் நாட்டை மீட்டிருக்கிறோம். மத்திய பா.ஜ.க. அரசு, நம்முடைய உரிமைகளுக்கு எதிராக எத்தனை நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், அத்தனையையும் எதிர்த்து இன்றுவரை போராடி வருகிறோம்

இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம்

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான். தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் வலங்கைமான் நிர்வாக குழு கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது இந்த கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாக குழு கோ.ரவி தலைமை தாங்கினார். CPI ஒன்றிய செயலாளர் S.M. செந்தில் குமார் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட செயலாளர் கு.ராஜா அவர்கள் பின்வருமாறு சிறப்புரையாற்றினார்.

ஒன்றிய அரசு ( மோடி அரசு ) கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமாகவும் அதன் சார்ந்த நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு தெரிவித்து வருகிறது.

அவர்கள் வாங்குகிற கடன்களை திடீரென்று ரத்து செய்து அவர்களை மேலும் மேலும் உலக அளவில் பணக்கார வரிசையில் நிறுத்தி வருகிறது . அதற்கு மூலவித்தாக செயல்படுபவர் நமது பிரதமர் தான் என்பது தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது.



ஆனால் பசியால் துடித்துக் கொண்டிருக்கக் கூடிய மக்களை பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத போது முந்தைய அரசு கொண்டு வந்த குடும்பத்திற்கு 100 நாள் வேலை அப்படி என்றால் குறைந்தபட்சம் வேலை உத்திரவாதப் படுத்துகிற ஒரு சட்டம் இது ஒழுங்காக நிறைவேற்றினால் ஓரளவு பசியிலிருந்து பட்டினி சாவிலிருந்து விடுபடுவதற்கு வாய்ப்பாக கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு விளங்கியது.

ஆனால் தற்போதைய ஒன்றிய அரசு 100 நாள் வேலையை குறைத்து 50 நாள் 40 நாள் கொடுப்பதும் செய்த வேலைக்கு கூலி கொடுக்காமல் காலத்தை நீடிப்பதும் வாடிக்கையாக இருந்து வருவது வருத்தம் அளிக்கிறது.

இது மக்களுக்கான அரசா என்ற கேள்வி எழுகிறது. எனவே 100நாள்வேலையைகுறைக்காமல் 200 நாட்கள் வேலை கொடுக்க திட்டமிடவேண்டும்.குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக 200 நாள் வேலை வழங்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

நாளொன்றுக்கு தின ஊதியம் ரூ 600 வழங்கிட வேண்டும்.

சமத்துவ பிற சுடுகாட்டிற்கு 15 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்கிற மாநில அரசு, குடியிருப்பதற்கு 2. 1/4 லட்சம் , 3.1/4லட்சம் ஒதுக்குவது வேதனை அளிக்கிறது.6 லட்சத்தில் தொகுப்பு வீடு கட்டி தர வேண்டும்.

குடி மனை பட்டா இல்லாதவர்களுக்கு பட்டா வழங்கிட வேண்டும் . கோயில் மனையில் குடியிருப்பவருக்கு கலைஞர் அரசு வழங்கியது போன்று 3 சென்ட் பட்டா வழங்கிட வேண்டும். என்கிற கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை மாதம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மறியல் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது . அனைத்து பகுதி மக்களும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம் என்று அறிவித்தார். இறுதியில் வி.ச ஒன்றிய செயலாளர் சின்னராஜா நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## உலகப்புகழ் பெற்ற தேசிய நெல் திருவிழா அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா பங்கேற்பு

திருத்துறைப்பூண்டி தேசிய நெல் திருவிழா 2025 பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுத்து பரவலாக்கம் செய்யும் முயற்சியாக மறைந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி ஐயா நம்மாழ்வார் அவர்களால் 2006 ல் தொடங்கி வைக்கப்பட்டு, மறைந்த பாரம்பரிய நெல் மீட்பாளர் ஐயா நெல்ஜெயராமன் அவர்களால் நடத்தப்பட்டு வந்த தேசிய அளவிலான நெல் திருவிழா, இவ்வாண்டும் ஆதிரெங்கம் நெல் ஜெயராமன் பாரம்பரியநெல் பாதுகாப்பு மைய முன்னோடி உழவர்களின் தலைமையில் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ARV தனலட்சுமி திருமண அரங்கத்தில் 2025 மே 31 ம் தேதி சனிக்கிழமை நடைபெற்றது. தேசிய நெல் திருவிழாவில் உழவர்களின் பேரணி, கருத்தரங்கம், பாரம்பரிய விதை நெல் வழங்கல், கண்காட்சி, கலைநிகழ்ச்சி இடம்பெற்றது.

தேசிய நெல் திருவிழாவின் முதல் நிகழ்வாக காலை 8 .00 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் பாரம்பரிய கோட்டையை வைத்து காய் கறிகளால் அலங்காரம் செய்யப்பட்டு நம்மாழ்வார் மற்றும் நெல் ஜெயராமன் உருவப்படங்களுடன் மங்கள இசை மற்றும் மரபு கலைநிகழ்ச்சிகளுடன் 300 க்கும் மேற்பட்ட உழவர்கள் பங்கேற்கும் பேரணி திருத்துறைப்பூண்டி உழவர் சந்தையிலிருந்து விழா மண்டபத்தை மரபு கலை நிகழ்ச்சிகளுடன் வந்தடைந்தது. நிகழ்விற்கு புதுச்சேரி மாநில இயற்கை வேளாண் விவசாயிகள் சங்க தலைவர் வேணுகோபால் தலைமையேற்கிறார். திருத்துறைப்பூண்டி நெல் உற்பத்தியாளர் சங்க தலைவர் பாலகிருஷ்ண ராஜா, தமிழக இயற்கை உழவர் இயக்க மாநில செயலாளர் பள்ளத்தூர் முருகையன், சென்னை நேஷனல் அக்ரோ பவுண்டேசன் இயக்குனர் முனைவர் முருகன், பேரிடர் மேலாண்மைக்குழு உறுப்பினர் செல்வகணபதி முன்னிலை வகிக்கின்றனர். திருவாரூர் வேலுடையார் கல்வி குழுமங்களின் தலைவர் தியாகப்பாரி பேரணியை துவக்கி வைத்தார்.

பாரம்பரிய நெல் மீட்பாளர் ஐயா நெல்ஜெயராமன் அவர்களால் மீட்டெடுக்கப்பட்ட 174 பாரம்பரிய நெல் ரகங்களின் கண்காட்சி நடைபெறும். நிகழ்விற்கு காரைக்கால் மருத்துவர் உமாமகேஸ்வரி தலைமையேற்றார் , நகர கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் சண்முகசுந்தரம், கிரீன் நீடா தலைமை ஒருங்கிணைப்பாளர் ராஜவேல், மின் அமைப்பாளர்கள்சங்கதலைவர்திருத்துறைப்பூண்டி கண்ணன் முன்னிலை வகித்தனர். ARV குழும நிறுவனங்களின் உரிமையாளர் விவேக் கண்காட்சியை திறந்து வைத்தார்.

விற்பனை கண்காட்சி அரங்கை திருத்துறைப்பூண்டி வர்த்தகர்கள் சங்க தலைவர் செந்தில்குமார் திறந்து வைத்தார். நிகழ்விற்கு பாரதமாதா தொண்டு நிறுவன இயக்குனர் மணிமாறன், ராய் டிரஸ்ட் மற்றும் ரிச் யூனிவர்சிட்டி நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர். துரை ராயப்பன், கிருஷ்ணா திருமண அரங்க உரிமையாளர் சந்திரசேகரன், திருவாரூர் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மைய பொதுச்செயலர் ரமேஷ் முன்னிலை வகித்தனர். முன்னாள் நகர்மன்ற தலைவர் பாண்டியன் தலைமையேற்றார்.



வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், மற்றும் நெல் ஜெயராமன் உருவப்படங்கள் திறக்கப்பட்டு , மறைந்த முன்னோடி உழவர்களுக்கும் உழவர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி நடைபெறும். நிகழ்விற்கு திருத்துறைப்பூண்டி நகர் மன்ற தலைவர் கவிதா பாண்டியன் தலைமையேற்றார்... முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் கலைராணி கண்ணன், கும்பகோணம் CUB அறக்கட்டளை அறங்காவலர் பாலசுப்பிரமணியன்,பழனிகனிஇயற்கைவேளாண் பண்ணை கவிதா ரகுநாத் பாரதி , கட்டிமேடு சித்ரா நெல் ஜெயராமன் முன்னிலை வகித்தனர். திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து நெல் ஜெயராமன் , நம்மாழ்வார் மற்றும் மறைந்த முன்னோடி உழவர்களின் உருவப்படங்களை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குனர் திருவாரூர் பாலசரஸ்வதி, , திருவாரூர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ரெங்கராஜ், வேளாண்மை துணை இயக்குனர் திருவாரூர் விஜயலக்ஷ்மி, திருத்துரைப்பூண்டு சி யு பி வங்கி கிளை மேலாளர் சுவாமிநாதன், திருத்துறைப்பூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி, திருத்துறைப்பூண்டி முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் பாஸ்கர், திருவாரூர் வேளாண் வணிகம், வேளாண்மை துணை இயக்குனர் வாணி, திருவாரூர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித்துறை திட்ட அலுவலர் சியாமளா, பாலம் தொண்டு நிறுவன இயக்குனர் செந்தில் குமார், திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் பரமேஸ்வரி, வட்ட வழங்கல் அலுவலர் சிவகுமார், வேளாண்மை உதவி இயக்குனர் கந்த பாண்டியன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் இளவரசன், அரசு வழக்கறிஞர் பாஸ்கர், ஆதிரெங்கம் முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் சரஸ்வதி ராமகிருஷ்ணன் , முன்னாள் ஊராட்சி மன்ற துணைதலைவர் பொற்செல்வி செல்லப்பாண்டியன், கட்டிமேடு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மாலினி ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்பு வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சியில் சித்தமருத்துவர் சிவராமன் அவர்களின் தலைமையில் உழவர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. . நிகழ்வில் கலந்துகொள்ளும் அனைவருக்கு நிலவேம்பு கஷாயம், வழங்கப்பட்டது. பல்வேறு வேளாண்சார்ந்த கண்காட்சி அரங்குகளும் , செயல் விளக்கங்களும், வேளாண் இயந்திரங்கள், இந்தியா முழுவதும் பயிரிடப்படும் பாரம்பரிய நெல் ரகங்களின் கண்காட்சி, வேளாண் இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் பயன்படுத்துதல் குறித்த கண்காட்சி, பாரம்பரிய மரபு பொருட்களின் விற்பனை கண்காட்சி, பாரம்பரிய இயற்கை விவசாய வல்லுனர்களின் அனுபவ பகிர்வு அரங்கம் மற்றும் பல பயனுள்ள சிறப்பு அம்சங்கள் இடம்பெற்றது. விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் காலை உணவாக கேழ்வரகு கூழ், மாப்பிள்ளை சம்பா, காட்டுயாணம் கஞ்சி, கூழ் வடகம் , கொத்தவரங்காய் வற்றல் வழங்கப்பட உள்ளது. மதிய விருந்தாக கருப்பு கவுணி அரிசியில் தயார் செய்த சர்க்கரை பொங்கல், ரத்தசாலி அரிசியில் தயார் செய்த சாம்பார் சாதம், மாப்பிள்ளை சம்பா / காட்டுயாணம் அரிசியில் தயார் செய்த தயிர் சாதம் மதிய உணவாக வழங்கப்பட்டது. பாரம்பரிய நாட்டு விலங்குளை பராமரித்து ஆராய்ச்சி செய்யும் விருத்தாச்சலம் கரிகால சோழன் மற்றும் 500 க்கும் மேற்பட்ட பாரம்பரிய நாட்டின பசுக்களை பராமரித்து ஆராய்ச்சி செய்து கொண்டுள்ள ஹெச் சி எல் டைரக்டர் அருண் ஜனார்தன் போன்ற வனவிலங்கு ஆர்வலர்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். பாரம்பரிய நெல் பாதுகாப்பு மைய மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜீவ் அனைவருக்கும் நன்றி கூறினார்.




# குடும்ப பிரச்சினையில் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் விஷம் குடித்து தற்கொலை

தூத்துக்குடி ஜூன்3

தூத்துக்குடி கோமஸ்புரத்தைச் சேர்ந்த கருப்பசாமி (வயது 54), தூத்துக்குடி நகர கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு சப் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வந்தார். அவருக்கு குடும்பப்பிரச்சினை இருந்ததாம். இந்த நிலையில் மருத்துவ விடுப்பிலிருந்த

அவர், மே 22ம்தேதி வீட்டில் விஷம் குடித்து மயங்கி விழுந்துள்ளார். அவரை மீட்டு தூத்துக்குடியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் மே 29ம்தேதி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து தாளமுத்து நகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.



திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சுண்டக்கம்பாளையம் முதல் வகுப்பில் புதிதாக சேர்ந்த மாணவர்களுக்கு ரோஜா பூ கொத்து கொடுத்து வரவேற்பு செய்தனர் நிகழ்வில் எஸ் எம் சி மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் பள்ளி தலைமை ஆசிரியர் எஸ் காளியப்பன் வரவேற்ற நிகழ்வு

# திமுக பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எவை? முழு விவரம்

மதுரை ஜூன் 3

மதுரை மாவட்டம் உத்தங்குடியில்திமுகபொதுக்குழு கூட்டம் இன்று நடைபெற்று வருகிறது. சட்டசபை தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் திமுக பொதுக்குழு கூட்டம் அக்கட்சியினர் மத்தியிலும், அரசியல் களத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றுவரும் இந்த பொதுக்குழு கூட்டத்தில் 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மதுரையில் நடைபெறும் திமுக பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 27 தீர்மானங்கள் விவரம்:

1. கருணாநிதி பிறந்தநாளான ஜூன் 3ஆம் நாளை செம்மொழி நாளாக நாடெங்கும் கொண்டாடுவோம்!

2. மக்களின் பேராதரவுடன் தொடர் வெற்றி நாயகராகத் திகழும் தமிழ்நாடு முதல்அமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு பாராட்டுகள்!

3. இந்தியாவுக்கே முன்னோடியாக மகளிர் வாழ்வை மேம்படுத்தும் திராவிட மாடல் அரசு!

4. உழவர்கள் நெசவாளர்கள் மீனவர்கள் என அனைத்துத் தரப்பினரின் வாழ்விலும் புதிய விடியல் தந்த திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பரப்புவோம்!

5. தமிழினத்திற்குப் பெருமை சேர்த்த தலைவர்களைப் போற்றும் திமுக அரசுக்கு பாராட்டு!

6. ஒவ்வொரு குடும்பமும் பயன் பெற்றுள்ளதிராவிட மாடல்அரசின் சாதனைத் திட்டங்களைத்தொடர்ந்து மக்களிடம் எடுத்துரைப்போம்!

7. தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கையாக மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள துணை முதல்அமைச்சர் இளம் தலைவரின் பணி தொடரத் துணை நிற்போம்!

8. ஏழைஎளிய மக்களை வதைக்கும் நகைக்கடன் கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி உடனே நீக்க வேண்டும்!

9. தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய நிதியைத் தர மறுக்கும் மத்திய அரசுக்குக் கண்டனம்!

10. தமிழர்களின் மொழி உணர்வுடன் விளையாடாமல் இந்தித் திணிப்பைக் கைவிடுக!

11. கீழடி ஆய்வை மறுக்கும் தமிழ் விரோத பா.ஜ.க அரசுக்குக் கண்டனம்!

12. ரெயில்வே திட்டங்களில் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் பா.ஜ.க அரசுக்கு கண்டனம்!

13. சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிக்கும் நோக்கில் இஸ்லாமியர் சொத்துக்களைச் சூறையாடும் வக்பு திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுக!

14. மத்திய விசாரணை அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்!

15. மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில் தொடரும் அநீதிகள்!

16. மீனவர்கள் நலன் காக்க கச்சத்தீவை மீட்டிடுக!

17. சாதிவாரிக் கணக்கெடுப்பை விரைவாகவும் முறையாகவும் நடத்திடுக!

18. தமிழ்நாட்டின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை கூடாது!

19. கவர்னரின் அதிகார வரம்பை வரையறுத்து மாநில உரிமையை நிலைநாட்டிய சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக்குக் காரணமான திமுக தலைவருக்குப் பாராட்டு!

20. துணை ஜனாதிபதியின் விமர்சனத்திற்குக் கண்டனம்!

21. அரசியலமைப்புச் சட்டத்தை மதிக்காமல் சுப்ரீம்கோர்ட்டோடு மோதும் பா.ஜ.க அரசுக்குக் கண்டனம்!

22. சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை முன்வைத்துக் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் இணைத்திடுக!

23. மலரட்டும் மாநில சுயாட்சி!

24. பேரிடர் மீட்புப் பணியில் திமுக அரசுடன் திமுகவினரும் துணை நிற்போம்!

25. எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என அழகிய தமிழ்ப்பெயர்களைச் சூட்டுவோம்

26. அ.தி.மு.க. ஆட்சியின் அவலமான பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு வரவேற்பு

27. வஞ்சக பா.ஜ.க.வையும் துரோக அ.தி.மு.க.வையும் விரட்டியடித்து 2026இல் திமுக ஆட்சி தொடர களப்பணியைத் தொடங்குவோம்

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடியின் தலைமையில் நாடு ஒரு தீர்க்கமான மாற்றம் கண்டுள்ளது கவர்னர் ஆர்.என்.ரவி




சென்னை ஜூன் 3

"ஆபரேஷன் சிந்தூர்" என்ற குறுகியகால மற்றும் துரிதமான ராணுவ நடவடிக்கையில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பெற்ற தீர்க்கமான வெற்றியைக் கொண்டாடும் வகையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கவர்னர் ஆர்.என். ரவி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், "ஆபரேஷன் சிந்தூர்" நடவடிக்கை மூலம் அரசு ஆதரவு பயங்கரவாதத்துக்கு எதிரான சகிப்புத்தன்மையற்ற நிலையை இந்தியா வெளிப்படுத்தியதாக விவரித்தார். பாகிஸ்தானை வெளிப்படையாகத் தண்டித்தது, தனது உள்நாட்டு ராணுவத் திறன்களை பறைசாற்றியது, ஆயுதப் படைகளின் வீரம் மற்றும் நமது தேசியத் தலைமை மற்றும் ஆயுதப் படைகள் மீது ஒவ்வோர் இந்தியரும் கொண்டுள்ள கூட்டு நம்பிக்கையை வெளிப்படுத்தியது என்று கூறினார்.

மேலும் பல தசாப்த அடக்குமுறைகளிலிருந்து விடுபட்ட போதும், பாகிஸ்தானின் தொடர்ச்சியான தவறான செயல்களுக்கு போதுமான வகையில் எதிர்வினையாற்றாதது மற்றும் முடிவெடுக்க இயலாதது போன்ற நிலைகளுக்கு மாறாக பிரதமர் மோடியின் தலைமையில் நாடு ஒரு தீர்க்கமான மாற்றம் கண்டு, ராணுவ வலிமை மற்றும் ராஜ்ய செல்வாக்கு உள்ளிட்ட தனது தேசிய வளங்களை தேச நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்துவதற்கான தெளிவு, துணிச்சல், உறுதிப்பாடு, அரசியல் விருப்பம் ஆகியவற்றால் வரையறுக்கப்பட்டதாக கவர்னர் குறிப்பிட்டார்.

# இன்ஸ்டாகிராம் ஆண் நண்பரை நம்பி சென்னை வந்த சிறுமி மீட்பு

சென்னை, ஜூன் 3

இன்ஸ்டாகிராம் மூலம் பழகிய ஆண் நண்பரை நம்பி திருவண்ணாமலையில் இருந்து சென்னை வந்த 17 வயது சிறுமியை போலீசார் மீட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த 17 வயது சிறுமிக்கு இன்ஸ்டாகிராம் மூலம் சென்னையை சேர்ந்த இளைஞருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த இளைஞர்சிறுமியை சென்னைக்கு அழைத்ததை தொடர்ந்து, சிறுமி சென்ட்ரல்ரயில்நிலையம்அருகே காத்திருந்தார்.

இதனையடுத்து ரயில் நிலையத்திற்கு வெளியே இருந்த சிறுமியிடம் பேச்சு கொடுத்த அதே பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கொத்தவால்சாவடி பகுதியில் உள்ள ஒரு பாழடைந்த கட்டடத்திற்குள் அழைத்துச் சென்றுள்ளனர். இதனை பார்த்த அதே பகுதியை சேர்ந்த நபர் அளித்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் சிறுமியை மீட்டு, இளைஞர்களிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜாமீனில் எடுக்க தாமதமானதால் ஆத்திரம்... மனைவிக்கு விஷம் கொடுத்து கொன்ற கணவன்



தஞ்சாவூர் ஜூன் 3

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே ஜாமீனில் எடுக்க காலதாமதமானதால் ஆத்திரமடைந்த கணவன், மனைவிக்கு விஷம் கொடுத்து கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முள்ளூர்பட்டிக்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் பால்ராஜ் (50 வயது). இவரது மனைவி சரஸ்வதி (47 வயது). இவர்களுக்கு ஒரு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். சமீபத்தில் ஒரு வழக்கில் பால்ராஜ் சிறைக்கு சென்றார். இந்த நிலையில் தன்னை ஜாமீனில் எடுக்குமாறு பால்ராஜ், சரஸ்வதியிடம் கூறியுள்ளார். சில காரணங்களால் ஜாமீனில் எடுக்க காலதாமதமாகியுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த பால்ராஜ் ஜாமீனில் வெளியே வந்ததும், மனைவிக்கு வலுக்கட்டாயமாக விஷம் கொடுத்து கொலை செய்ய முயன்றார். சரஸ்வதி கூச்சல்போட அவரது சத்தம் கேட்டு வந்த அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட சரஸ்வதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதுகுறித்து அவரது மகள் அளித்த புகாரின் பேரில் பால்ராஜை போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பள்ளி மாணவமாணவிகளுக்கு ஒரு வாரத்தில் இலவச பஸ் பாஸ் வழங்க நடவடிக்கை



சென்னை, ஜூன் 3

கோடை விடுமுறை முடிந்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் நாளை (திங்கட்கிழமை) திறக்கப்பட உள்ளன. பள்ளிகள் திறக்கப்பட்ட 2 வாரத்துக்குள் இலவச பஸ் பயண அட்டை (பஸ் பாஸ்) வழங்கப்பட்டு வருகிறது. சில நேரங்களில் காலதாமதமும் ஏற்படுகிறது.

இந்த ஆண்டு காலதாமதம் ஏதும் இன்றி சரியான நேரத்தில் மாணவமாணவிகளுக்கு வழங்க அரசு போக்குவரத்துக்கு கழகத்தின்கீழ் செயல்படக்கூடிய சாலை போக்குவரத்து நிறுவனம் (ஐ.ஆர்.டி.) முடிவு செய்துள்ளது.

அதன்படி, பள்ளி மாணவமாணவிகளின் விவரங்களை உள்ளடக்கிய கல்வி மேலாண்மை தகவல் அமைப்பு (எமிஸ்) வாயிலாக விவரங்களை பதிவிறக்கம் செய்து அதன் அடிப்படையில் பயண அட்டையை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது.

அதற்காக பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் படிக்கும் மாணவமாணவிகளில் யார்? யாருக்கெல்லாம் பஸ் பயண அட்டை வேண்டும் என்ற விவரத்தை தெரிவிக்கவும், அதனை அடிப்படையாக வைத்து பஸ் பயண அட்டையை வழங்க ஏதுவாகவும் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

# டெல்லி மதராசி பகுதியில் தமிழர்களின் வீடுகள் இடிப்பு பிரேமலதா விஜயகாந்த் கண்டனம்



சென்னை, ஜூன் 3

டெல்லியின் ஜங்புரா பகுதியில் அமைந்துள்ள மதராசி பகுதியில் சட்டவிரோத கட்டுமானங்களுக்கு எதிராக புல்டோசர் நடவடிக்கையை டெல்லி நிர்வாகம் தொடங்கி உள்ளது. இதனால் 3 தலைமுறைகளாக அங்கு வாழ்ந்துவரும் மக்கள் தவித்து வருகின்றனர். இந்நிலையில் மதராசி பகுதி தமிழர்களுக்கு உடனடி தீர்வு, நீதி கிடைக்க வேண்டும் என்று பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தி உள்ளார். இதுதொடர்பாக மேலும் அவர் கூறுகையில், "தமிழ் மக்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யாமல் வீடுகளை இடிப்பது எவ்விதத்தில் நியாயம்?. மதராசி பகுதி தமிழர்களுக்கு உடனடி தீர்வு, நீதி கிடைக்க வேண்டும்

அந்த பகுதியில் சுமார் 3 தலைமுறைகளாக வாழும் தமிழர்களின் வீடுகளை, கால்வாய் அகலப்படுத்தும் திட்டத்திற்காக இடிப்பதற்கு கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மக்களுக்கு டெல்லி ஆட்சியாளர்கள் உடனடியாக மாற்று இருப்பிடத்தையும், வீடுகளையும், வசதிகளையும், ஏற்படுத்தித் தந்து பாதுகாக்க வேண்டியது அவர்களின் கடமை" என்று பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்

# நாகை-இலங்கை கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடக்கம்



நாகப்பட்டினம், ஜூன் 3

நாகை, இலங்கை காங்கேசன்துறை இடையே கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ந் தேதி 'செரியாபாணி' என்ற பெயரில் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது. பருவமழை மற்றும் பல்வேறு காரணங்களால் அதே மாதம் 23ந் தேதி முதல் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

அதன் பின்னர் சுபம் என்ற கப்பல் நிறுவனம் மீண்டும் நாகையில் இருந்து காங்கேசன்துறைக்கு 'சிவகங்கை' என்ற பெயரில் கடந்த ஆண்டு (2024) ஆகஸ்டு மாதம் 16ந் தேதி முதல் புதிய பயணிகள் கப்பல் சேவையை தொடங்கியது.

இருநாட்டு பயணிகளின் ஆர்வத்தால் சனிக்கிழமை தவிர, வாரத்தில் 6 நாட்கள் இரு மார்க்கத்திலும் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடல் சீற்றம் காரணமாக கடந்த 24ந் தேதி முதல் 31ந் தேதி வரை கப்பல் இயக்கம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

தற்போது கடல் சீற்றம் தணிந்துசீரானவானிலை நிலவுவதால் நேற்று நாகை இலங்கை இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்கியது. நாகை துறைமுகத்தில் இருந்து நேற்று காலை 7.30 மணி அளவில் கப்பல் இலங்கைக்கு புறப்பட்டது. அந்த கப்பலில் 112 பேர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டனர்.

# ரீல்சுக்காக ரெயிலின் படிக்கட்டில் நடனம் ஆடிய இளம்பெண்; நெட்டிசன்கள் கண்டனம்



கன்னியாகுமரி, ஜூன் 3

சமூக வலைதளங்களில் லைக் பெறவும், பாலோயர்களை அதிகரிக்கவும் ஆபத்து ஏற்படுத்தும் வகையிலான வீடியோக்களை எடுத்து வெளியிட்டு வருகின்றனர். கடல்அலை, உயர்ந்த மலை என இயற்கை சீற்றம் காணப்படும் பகுதிகளிலும், விரைவாக செல்லும் ரெயிலின் முன்பும் நின்றும் செல்பிக்களையும், வீடியோக்களையும் எடுக்க ஆர்வம் காட்டுகின்றனர்.

அவர்களின் இந்த ஆர்வம் சில சமயங்களில் ஆபத்தில் முடிந்து விடுகிறது. தவிரவும், மற்றவர்களுக்கு தவறான எடுத்துக்காட்டாகவும் அமைந்து விடுகிறது.

இந்நிலையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் இளம்பெண் ஒருவர் ஓடும் ரெயிலின் படிக்கட்டில் நின்று நடனமாடிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. வீடியோ வைரலான நிலையில், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரெயில் பயணிகள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஷகீலா பானு என்ற அந்த இளம்பெண் ரெயிலின் படிக்கட்டில் நின்றபடி, ரீல்சுக்காகவும், லைக்குகளுக்காகவும் ஆபத்து தரும் வகையிலான வீடியோவை எடுத்து வெளியிட்டு உள்ளார். இதற்கு நெட்டிசன்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். ரெயில்வே போலீசார், அந்த பெண்ணின் முகவரியை வைத்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# சென்னையில் போதைப்பொருள் கடத்தல் மேலும் 5 பேர் கைது

சென்னை, ஜூன் 3

சென்னையில் போதைப்பொருள் ஊடுருவலை தடுப்பதற்காக போதைப்பொருள்தடுப்பு நுண்ணறிவு பிரிவை காவல் ஆணையர் தொடங்கி வைத்தார். இதனை தொடர்ந்து சூளைமேடு, அசோக்நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட நபர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

போதைப்பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக இதுவரை 23 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில்,

மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்படி கஜேந்திரன், பைசல் நூர், செல்வராஜ், இர்பான் மற்றும் விக்னேஷ் ஆகிய 5 பேரை தனிப்படை போலீசார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து 54 கிராம் கொக்கைன், 6 கிராம் மெத்தப்பெட்டமைன் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பெங்களூருவை தலைமையிடமாக கொண்டு இயங்கி வரும் போதைப்பொருள் கும்பலை சேர்ந்தவர்களை கைது செய்வதற்காக தனிப்படை போலீசார் பெங்களூரு சென்றுள்ளதாக காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 18 பவுன் நகை, ரூ.1½ லட்சம் கையாடல்; போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் அதிரடி கைது

பொள்ளாச்சி, ஜூன்3

கோவை மாவட்டம் சோமனூர் அருகே உள்ள மாதப்பூரைச் சேர்ந்த ரவிக்குமார் மகன் வருண்காந்த் (வயது 23). மனநலம் பாதித்த இவரை பொள்ளாச்சி மகாலிங்கபுரம் முல்லை நகரில் செயல்பட்டு வந்த தனியார் காப்பகத்தில் சேர்த்தனர். இந்த நிலையில் கடந்த 12ந் தேதி வருண்காந்தை காப்பக ஊழியர்கள் அடித்து கொலை செய்தனர். பின்னர் காப்பக நிர்வாகி கவிதாவுக்கு சொந்தமான நடுபுணியில் உள்ள தோட்டத்தில் உடலை புதைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து கவிதா உள்பட 11 பேரை கைது செய்தனர். மனநலம் பாதித்த வாலிபரை ஆழியாருக்கு சுற்றுலா அழைத்துச் சென்றபோது



காணாமல் போனதாக நாடகம் ஆடியதும் அம்பலமானது.

முன்னதாக இந்த கொலை வழக்கில் தொடர்பு உடையவர்களை பிடிக்க 8 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. இதில் தனிப்படையைச் சேர்ந்த மகாலிங்கபுரம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் தலைமையில் மேட்டுப்பாளையம் சப் இன்ஸ்பெக்டர் மகாராஜா மற்றும் போலீசார் இடம் பெற்று இருந்தனர். இவர்கள் கடந்த 28ந் தேதி திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் வைத்து காரில் தப்பிச் சென்ற கவிதா, சுருதி, ஸ்ரேயா உள்பட 5 பேரை கைது செய்தனர். இதில் கவிதா, சுருதி, ஸ்ரேயா ஆகியோரிடம் இருந்து 18½ பவுன் நகைகள், ரூ.1½ லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஆனால் பறிமுதல் செய்த நகை, பணம் குறித்து சப்இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன், போலீஸ் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கவில்லை என கூறப்படுகிறது. அதை கருவூலத்திலும் ஒப்படைக்கவும் இல்லை. இதற்கிடையில் கைதான 5 பேரும் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் கைதானவர்களின் உறவினர்கள் நகை, பணம் குறித்து போலீஸ் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து போலீஸ் அதிகாரிகள், சப் இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனிடம் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் நகை, பணத்தை அவர் கையாடல் செய்தது தெரியவந்தது. வேலியே பயிரை மேய்ந்த கதையாக நகை, பணத்தை கையாடல் செய்த சப்இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். கொலை வழக்கில் குற்றவாளிடம் இருந்து நகை, பணத்தை கையாடல் செய்ததாக சப் இன்ஸ்பெக்டர் கைது செய்யப்பட்ட சம்பவம் கோவை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

# மதுரைக்கு அளித்த வாக்குறுதிகள் என்ன ஆனது? எடப்பாடி பழனிசாமி கேள்வி

சென்னை, ஜூன் 3

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

பந்தல்குடி கால்வாயை திரைச்சீலை போட்டு மறைக்க முயன்றதை போன்று தான், வெற்று விளம்பரங்களால் 4 ஆண்டுகால அலங்கோல ஆட்சியின் அவலங்களை மறைக்க முயல்கிறது ஸ்டாலின் மாடல் திமுக அரசு. சங்கம் வளர்த்து தமிழுக்கு பெயர் தந்த மதுரையை, தமிழ்நாட்டின் இரண்டாவது மாநகராட்சியை, கல்லும் மண்ணுமான தரமற்ற சாலைகள், முறையற்ற சாக்கடை வடி



கால் என அடிப்படை வசதிகள் கூட இல்லாத குப்பை மாநகராட்சியாக மாற்றி, கற்காலத்திற்கே கொண்டு சென்றதே ஸ்டாலின் அரசின் சாதனை.

நீங்கள் வாக்குறுதி அளித்த வேளாண் பல்கலைக்கழகம் எங்கே?... போட்டித் தேர்வுகள் மையம் எங்கே?... தொழில் வழித் தடம் எங்கே?...வர்த்தகமையம் எங்கே?... மதுரை மெட்ரோ எங்கே?... மதுரைக்கு சொன்ன எதேனும் ஒரு வாக்குறுதியை நிறைவேற்றினீர்களா?. உங்கள் அப்பாபெயர்(கருணாந்தி) விளம்பரத்துக்காக ஒரு நூலகம் அமைத்ததை மட்டும் வைத்துக்கொண்டு, இது தான் சாதனை எனில், மதுரை மக்களுக்கு இதை விட பெரும் சோதனை என்ன இருக்கப் போகிறது?.

பந்தல்குடி கால்வாயை திரை போட்டு மறைத்ததே வெட்கக்கேடான செயல். அதை விட, Dam age Control என்ற பெயரில் முதல்அமைச்சர் கையை காட்டிக்கொண்டு போஸ் கொடுத்த போட்டோ ஷூட் வேடிக்கையின் உச்சம். போட்டோ ஷூட் தவிர வேறு எதுவுமே உங்களுக்கு தெரியாதா முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின்?. இத்தனை கேள்விகளுக்கு இடையே, பொதுக்குழு நடத்துகிறேன் என மதுரைக்குவரமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்கூச்சப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவரா? போட்டோ ஷூட் என்றால் முழு ஒப்பனை (Full Makeup) உடன் வந்திடுவார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திமுகவில் மேலும் 2 அணிகள் உருவாக்கம்

மதுரை, ஜூன் 3

மதுரை உத்தங்குடியில், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக பொதுக்குழு கூட்டம் நடைபெற்று வருகிறது. 47 ஆண்டுகளுக்கு பிறகு மதுரையில் திமுக பொதுக்குழு நடைபெற்று வருகிறது. பொதுக்குழுவில் அமைச்சர்கள், திமுக எம்.பி.க்கள் என பலரும் பேசி வருகின்றனர். இறுதியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகிறார்.

வருகிற சட்டமன்ற தேர்தலை கருத்தில் கொண்டு




இந்த பொதுக்குழுவில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிகிறது. பல்வேறு அதிரடி தீர்மானங்களும் நிறைவேற்றப்பட இருக்கின்றன. சட்டசபை தேர்தலுக்கு இன்னும் ஒரு ஆண்டுகள் உள்ள நிலையில், திமுக பொதுக்குழு அரசியல் களத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், திமுகவில் அமைப்பு ரீதியாக மாற்றுத்திறனாளிகள் அணி புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள், பேராசிரியர்களை கொண்ட கல்வியாளர் அணி புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் திமுகவில் அமைப்பு ரீதியாக உள்ள அணிகளின் எண்ணிக்கை 23ல் இருந்து 25 ஆக உயர்ந்துள்ளது.

# நகைக் கடன் மீதான கட்டுப்பாடுகளை முழுமையாக நீக்க வேண்டும்: ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தல்

சென்னை ஜூன் 3

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பொதுமக்களின் அவசரத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், விவசாயிகள் தங்கள் தொழிலை மேற்கொள்வதற்கும், கிராமப்புற மேம்பாட்டிற்கும் இன்றியமையாததாக விளங்குவது நகைக் கடன் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நகைக் கடனை பெறுவதற்கு பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை பாரத ரிசர்வ் வங்கி வகுத்துள்ளது பொதுமக்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தங்கத்தை அடமானம் வைக்கும்போது அதன் மதிப்பில் 75 சதவீதம் மட்டுமே கடன் வழங்கப்பட வேண்டும்; அடமானம் வைக்கப்படும் நகைக்கான ஆதாரத்தை நகைக் கடன் பெறுவோர் அளிக்க வேண்டும்; தங்க நகைகளில் 22 காரட் அல்லது அதற்கு மேல் இருந்தால்



மட்டுமே கடன் வழங்கப்பட வேண்டும்; 24 காரட் தங்க நகையாக இருந்தாலும் 22 காரட் மதிப்பிலேயே கடன் வழங்க வேண்டும்; ஒரு கிலோ வரையிலான தங்க நகைகள் மட்டுமே அடமானம் வைக்கப்பட வேண்டும்; இவ்வாறு வைக்கப்படும் நகையில் 50 கிராம் மட்டுமே அச்சிடப்பட்ட நாணயங்களாக இருக்க வேண்டும் உள்ளிட்ட ஒன்பது கட்டுப்பாடுகளை விதித்து அண்மையில் பாரத ரிசர்வ் வங்கி அறிக்கை வெளியிட்டது. இந்தக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் நகைக் கடன் பெறுவது என்பது எட்டாக் கனியாகிவிடும்.

பொதுவாக நகைக் கடன்பெறுபவர்கள்ஏழையெளிய கிராமப்புற மக்களும், விவசாயிகளும், குறு மற்றும்சிறு தொழில்களை மேற்கொள்பவர்களும் தான் என்ற நிலையில், பாரத ரிசர்வ் வங்கியின் நகைக் கடனுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்று அனைத்துத் தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். தமிழ்நாடு அரசின் சார்பிலும் மத்திய அரசுக்கு இது தொடர்பான கோரிக்கை வைக்கப்பட்டது. இருப்பினும், இரண்டு லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும் சிறிய நகைக் கடனுக்கு மட்டும் விலக்கு அளிக்குமாறு பாரத ரிசர்வ் வங்கிக்கு மத்திய நிதி அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளதாக தகவல் வந்துள்ளது.

மத்திய அரசின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது என்றாலும், ஏற்கெனவே இருந்த நடைமுறை தொடர்ந்தால்தான் ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்றும், கிராமப்புற பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்றும், எனவே நகைக் கடன் பெறுவதற்கான புதிய வழிகாட்டு நெறிமுறைகள் முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். மூதாதையர்கள் வைத்துவிட்டு போன தங்க நகைகளுக்கு எல்லாம் ஆதாரம் கேட்பது, தங்கத்தின்மதிப்பில் 75 சதவீதம் மட்டுமே கடன் வழங்குவது, 24 காரட் தங்கத்திற்கும் 22 காரட் மதிப்பிலேயே கடன் வழங்குவது போன்றவை ஏற்றுக் கொள்ள முடியாத நெறிமுறைகளாக இருக்கின்றன என்று பொதுமக்கள் கருதுகிறார்கள்.

பொதுமக்களின் கருத்திற்கு மதிப்பளிக்கும் வகையில், பாரத ரிசர்வ் வங்கியால் அண்மையில் வெளியிடப்பட்ட நகைக் கடனுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஓய்வு பெற்றவர்களை மீண்டும் அரசுப் பணிகளில் பணியமர்த்துவது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று: நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜூன் 3

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழகத்தில் இளைஞர்கள் மத்தியில் வேலையில்லா திண்டாட்டம் பெருகி வரும் நிலையில், TNPCBஇன் தேர்வுகளுக்கு திறமையான விண்ணப்பதாரர்கள் இல்லை என்றும் இளைஞர்களுக்கு அனுபவம் இல்லை என்றும் கூறி அவர்களுக்கு பதிலாக ஓய்வூதியம் பெற்றவர்களை மறுசுழற்சி செய்து பணியமர்த்தியிருப்போது கண்டனத்திற்குரியது. மேலும்,



இந்த முடிவை நியாயப்படுத்தும் விதமாக, ஓய்வு பெற்றவர்கள் தலைமைச் செயலகத்தால் பரிந்துரைக்கப்பட்டனர் என்றும் அவர்கள் சிறப்பாக செயல்படுகிறார்கள் என்றும் TNPCB அறிவித்துள்ளது.

முதல்வரின் வாக்குறுதியை நம்பி லட்சக்கணக்கான படித்த பட்டதாரி இளைஞர்கள் அரசு வேலைக்காக காத்திருக்கும் பொழுது, ஓய்வு பெற்றவர்களை மறுசுழற்சி செய்து மீண்டும் அரசுப் பணிகளில் பணியமர்த்துவது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று. தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 10 லட்சம் இளைஞர்களுக்கு அரசு வேலை தருவோம் என்பது போன்ற பல அடுக்கடுக்கான பொய் வாக்குறுதிகளை அள்ளிவீசி ஆட்சிக்கு வந்த திமுக அரசு, இன்னும் அவற்றை நிறைவேற்றவில்லை.

அதுமட்டுமின்றி, இது போன்ற நியமனங்கள் இடஒதுக்கீடு விதிமுறைகள் மற்றும் TNPCBயின் நடைமுறைகளை மீறுவதாகவும் உள்ளது. எனவே, இதுபோன்ற பணியமர்த்தும் நடவடிக்கைகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலையிட்டு நிறுத்த வேண்டும் எனவும் தகுதி படைத்த பட்டதாரி இளைஞர்களை அத்தகைய பணிகளில் அமர்த்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். என தெரிவித்துள்ளார் .

# குற்றாலத்தில் குளிக்க அனுமதி சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியல்

தென்காசி, ஜூன் 3

குற்றால அருவிகளில் நீர் வரத்து அதிகரிப்பால், முன்பு சிலநாட்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது நீர்வரத்து சீராக இருப்பதால் மீண்டும் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குற்றால அருவிகளில் குளிக்க அனுமதி




வழங்கப்பட்டுள்ளதால், சுற்றுலா பயணிகள் ஆனந்தகுளியலில் குதித்து மகிழ்கின்றனர். மழை குறைந்து நீர்வரத்து சீராக இருப்பதை யடுத்து, மெயின்அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவி உட்பட அனைத்து அருவிகளிலும் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூரில் பேரிகார்டு மீது பைக் மோதி விபத்து: வாலிபர் பலி

தூத்துக்குடி ஜூன் 3

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகே உள்ள கூர்ந்தான்விளை, கிழக்கு தெருவைச் சேர்ந்த பிரம்மநாயகம் மகன் பாபு (வயது 35). இவருக்கு திருமணமாகவில்லை. கூலி வேலை செய்து வருகிறார்.

இவர் நேற்று முன்தினம் இரவு தனது பைக்கில் திருச்செந்தூரில் இருந்து குரும்பூருக்கு சென்று கொண்டிருந்தார். நத்தக்குளம் அருகே வளைவு ரோட்டில் சென்றபோது சாலையில் இருந்த பேரிகார்டு மீது பைக் மோதியது.

இதில் பலத்த காயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே இறந்தார்.

இது குறித்து திருச்செந்தூர் தாலூகா காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தனர்.

# எடப்பாடி பழனிசாமியை சந்தித்து வாழ்த்துபெற்ற அதிமுக ராஜ்யசபா வேட்பாளர்கள்



சென்னை ஜூன் 3

தமிழகத்தில் காலியாகும் 6 மாநிலங்களவை எம்.பிபதவிகளுக்குவரும் 16ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் ஒரு எம்.பி. வெற்றி பெற வேண்டுமென்றால் 34 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தேவை. அந்த அடிப்படையில் 6 எம்.பி. பதவிகளில்சட்டசபைபலத்திற்கு ஏற்ப தி.மு.க.விற்கு 4ம், அ.தி.மு.க.விற்குபா.ஜ.க. ஆதரவுடன் 2 எம்.பி.க்களும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இதனிடையே, ராஜ்ய சபா தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர்கள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, முன்னாள் எம்.எல்.ஏ. அதிமுக வழக்கறிஞர் அணி பிரிவு செயலாளர் இன்பதுரை மற்றும் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அவை தலைவர் தனபால் ஆகியோர் ராஜ்யசபா தேர்தலில் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதிமுக ராஜ்யசபா வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ள இன்பதுரை மற்றும் தனபால் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை இன்று நேரில் சந்தித்து வாழ்த்துபெற்றனர்.

ராஜ்யசபா தேர்தலில் அதிமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு ஒரு சீட் ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இரு சீட்களும் அதிமுகவுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# டெல்லியில் வீடுகளை இழந்த தமிழர்களுக்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜூன் 3

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

"மதராசி முகாம்" என்பது தெற்கு டெல்லி, நிஜாமுதீன் ரெயில்வே நிலையத்துக்கு அருகிலுள்ளபராப் புல்லா ஜங்க்புரா வடிகாலின் கரையில் அமைந்துள்ள ஓரங்கட்டப்பட்ட குடிசை பகுதியாகும். இக்குடிசைப் பகுதியிலுள்ள 370 குடிசை வீடுகளில் பெரும்பாலானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.



டெல்லி ஐகோர்ட்டு, "மதராசி முகாம்" என்பது பராப்புல்லா வடிகாலின் கரையில் கட்டப்பட்ட அனுமதியில்லாத கட்டடம்/ஆக்கிரமிப்பு எனக் குறிப்பிட்டுள்ளது. இதனால், வடிகாலில் அடைப்பு ஏற்பட்டு, சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பாக மழைக்காலத்தில் கடுமையான நீர் தேக்கம் ஏற்படுகிறது.

எனவே, டெல்லி நகர்ப்புற தங்குமிடம் மேம்பாட்டு வாரிய சட்டம் மற்றும் டெல்லி சேரி மற்றும் ஜேஜே குடியிருப்பு இடமாற்றக் கொள்கை, 2015ன் கீழ் தகுதியான குடியிருப்பாளர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு இணங்க, குடியிருப்பாளர்களின் மறுவாழ்வுமற்றும்இடமாற்ற தகுதியை மதிப்பீடு செய்ய ஒரு விரிவான கணக்கெடுப்பு, தகுதி தீர்மானக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த செயல்முறை அடிப்படையில், 370 குடியிருப்பாளர்களில் 215 பேர் தகுதியுடையவர்களாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகுதியுடைய பயனாளர்களுக்குத் டெல்லி மேம்பாட்டு ஆணையத்தின் பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவுக்கான (EWS) குடியிருப்பு யூனிட்டுகள், நரேலா, டெல்லியில் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், "மதராசி முகாம்" குடியிருப்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து சட்ட வழக்குகளும் தில்லி உயர்நீதிமன்றத்தால் 09.05.2025 தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அந்த உத்தரவின் படி, 01.06.2025 முதல் "மதராசி முகாம்" பகுதிகளில் இடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. "மதராசி முகாம்" பகுதியில் அனுமதியில்லாத கட்டிடங்களை இடிக்காமல் இருக்க குடியிருப்பாளர்களுக்கு இருந்த அனைத்து சட்ட வழிகளும் முழுமையாக முடிவடைந்துவிட்டன.

தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் உத்தரவின்படி, புது டெல்லியில் உள்ள "தமிழ்நாடு இல்ல" அலுவலகம், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. மாநிலத்துக்கு வெளியே வசிக்கும் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, "மதராசி முகாம்" குடியிருப்பாளர்களுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் தாமதமின்றி வழங்கப்படும் என்பதை உறுதி செய்கிறது.

"மதராசி முகாம்" குடியிருப்பாளர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களுக்கு திரும்ப விரும்பினால், அவர்களுக்கு தமிழ்நாடு அரசு உதவிக் கரம் நீட்டும். வாழ்வாதாரம் மற்றும் தேவையான பிற அடிப்படை உதவிகளும் வழங்கப்படும்.

இந்த உதவிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் அலுவலகம் மூலம் சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

3.6.2025

# அதிர்ச்சி சம்பவம்.. தூக்கில் தொங்கிய இளம்பெண்: காரணம் என்ன..? போலீசார் தீவிர விசாரணை

ஈரோடு ஜூன் 3

ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் உள்ள கிழக்கு புது வீதி மாணிக்கவாசகர் தெருவை சேர்ந்தவர் லோகநாதன். தறிப்பட்டறை வைத்து நடத்தி வருகிறார். இவருடைய மனைவி ஜமுனாதேவி (வயது 30). இவர்களுக்கு 2 வயதில் ஆண் குழந்தை உள்ளது. நேற்று முன்தினம் இரவு லோகநாதன் தனது மகனை தூக்கி வைத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியில் நின்று கொண்டு இருந்துள்ளார்.



அப்போது ஜமுனாதேவி திடீரென வீட்டுக்குள் சென்று படுக்கை அறையின் கதவை உள் பக்கமாக தாழ்பாள் போட்டு உள்ளார். இதை கவனித்த லோகநாதன் கதவை திறக்க சொல்லி சத்தம் போட்டுள்ளார். ஆனால் ஜமுனாதேவி கதவை திறக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதையடுத்து அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது மின்விசிறியில் துப்பட்டாவால் ஜமுனா தேவி தூக்குப்போட்டு தொங்கிகொண்டு இருந்தார்.

அதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த லோகநாதன் உடனடியாக ஜமுனாதேவியை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் சென்னிமலையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார். அங்கு பரிசோதனை செய்த டாக்டர் ஏற்கனவே ஜமுனா தேவி உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தார்.

இதுகுறித்து தகவல் கிடைத்ததும் சென்னிமலை போலீசார் தனியார் மருத்துவமனைக்கு சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக, அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். மேலும் வழக்குப்பதிவு செய்து ஜமுனாதேவி ஏன் தற்கொலை செய்து கொண்டார்? என்று விசாரணை நடத்தி வருகிறார்.

ஜமுனாதேவிக்கு திருமணம் ஆகி 5 ஆண்டுகளே ஆவதால் ஈரோடு ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# சுதந்திர போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் 256வது பிறந்தநாள்: கலெக்டர் மரியாதை



தூத்துக்குடி ஜூன் 3

சுதந்திரப் போராட்ட வீரர் வீரன் வெள்ளையத்தேவன் 256வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டம் வல்லநாட்டில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டில் வீரன் வெள்ளையத்தேவன் மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாவட்ட கலெக்டர் இளம்பகவத் நேற்று (31.5.2025) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தீரம் மிக்க வீரன் வெள்ளையத்தேவனை வீரபாண்டிய கட்டபொம்மன் தன் தளபதியாக மட்டுமல்லாமல் மகனாகவும் நினைத்துப் போற்றினார். வெள்ளையர்கள் வீரபாண்டியரிடம் கப்பம் கேட்டு வந்தபோது முதலில் சீறிப் பாய்ந்தது வெள்ளையத்தேவன்தான். பானர்மேன் என்ற ஆங்கிலத் தளபதி பாஞ்சாலங்குறிச்சியைக் கைப்பற்றும் நோக்கத்தோடு படையெடுத்து வந்தான். போர்தொடங்கியது. வெள்ளையத்தேவன்சுழன்றுசுழன்று ஆங்கிலேயர்களை வேட்டையாடிக் கொன்றார். கோட்டையை பலமாக காவல் காத்தார். இதைக் கண்ட தளபதி பானர்மேன் போர் முடிவதாக அறிவித்துவிட்டுப் பாசறைக்கு திரும்பினார். போர் முடிந்து விட்டது என்று நினைத்து கோட்டையின் மீது நின்று தன் படைகளுக்குக் கட்டளை இட்டுக் கொண்டிருந்த வெள்ளையத்தேவனை ஒரு ஆங்கிலச் சிப்பாய் போரின் நெறிமுறைகளுக்கு மாறாகச் சுட்டுவிட்டான். இதைச் சற்றும் எதிர்பாராத வெள்ளையத்தேவன் கோட்டையிலிருந்து விழுந்து மடிந்தார். வெள்ளையத்தேவனைச் சுட்டுக்கொன்றவனை அவரது மனைவி வெள்ளையம்மாள்குத்திக்கொன்றுவிட்டு வெள்ளைத்தேவனின் சாவுக்குப் பழி தீர்த்துக் கொண்டார்.

இத்தகைய வீரமிக்க போர்ப்படைத்தளபதியாக திகழ்ந்த வீரன் வெள்ளையத்தேவன் வீரத்தினை இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் அவருக்கு வல்லநாட்டில் முழுஉருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் அவர் பிறந்த நாளான மே 31ம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

நேற்றுநடைபெற்றவிழாவில்அவரதுசிலைக்குமாவட்ட கலெக்டர் இளம்பகவத் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும் அவர் வீரன் வெள்ளையத்தேவன் வாரிசுதாரர்கள் ஆறுமுகம், மாரிமுத்து ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

இந்தநிகழ்ச்சியில், தூத்துக்குடி வருவாய்கோட்டாட்சியர் பிரபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (மு.கூ.பொ.) முத்துக்குமார்,திருவைகுண்டம்வட்டாட்சியர்ரத்னாசங்கர், கருங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜவஹர், பழனிச்சாமிமற்றும்பொதுமக்கள்பலர்கலந்துகொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் (3.6.2025)

**மேஷம்**
பணி: பணிகளை நேரத்தில் முடிக்க சிரமம் ஏற்படும்; மன அழுத்தம் அதிகரிக்கலாம்.
குடும்பம்: துணையுடன் அமைதியாக பேசுவது நல்லது.
பணம்: பணவரவு சீராக இருக்கும்; செலவுகளை திட்டமிடுங்கள்.
ஆரோக்கியம்: தாயின் உடல்நிலையில் கவனம் தேவை.

**ரிஷபம்**
பணி: சிறப்பான முன்னேற்றம்; மேலாளர்களின் பாராட்டு கிடைக்கும்.
குடும்பம்: மகிழ்ச்சியான தருணங்கள்.
பணம்: சேமிப்பு அதிகரிக்கும்; விருப்பமான பொருட்கள் வாங்கலாம்.
ஆரோக்கியம்: நலமாக இருப்பீர்கள்.

**மிதுனம்**
பணி: சக பணியாளர்களால் மன அழுத்தம் ஏற்படும்.
குடும்பம்: துணையுடன் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளுங்கள்.
பணம்: பண இழப்பு வாய்ப்பு; செலவுகளில் எச்சரிக்கை.
ஆரோக்கியம்: தாயின் உடல்நிலையில் கவனம் தேவை

**கடகம்**
பணி: பணிகள் அதிகம்; திட்டமிட்டு செயல்பட வேண்டும்.
குடும்பம்: துணையுடன் சண்டை தவிர்க்க, விட்டு கொடுக்கவும்.
பணம்: வருமானம் அதிகம்; ஆனால் செலவுகளும் அதிகம்.
ஆரோக்கியம்: கால் வலி ஏற்படலாம்; நீண்ட பயணங்களை தவிர்க்கவும்.

**சிம்மம்**
பணி: பணிகளை நேரத்திற்கு முன் முடித்து பாராட்டு பெறுவீர்கள்.
குடும்பம்: துணையுடன் அன்பாக நடந்து கொள்ளுங்கள்.
பணம்: பண இழப்பு வாய்ப்பு; செலவுகளில் கவனம் தேவை.
ஆரோக்கியம்: ஒவ்வாமை மற்றும் கால் வலி ஏற்படலாம்.

**கன்னி**
பணி: மேலாளர்களின் பாராட்டு கிடைக்கும்.
குடும்பம்: துணையுடன் நல்லுறவு.
பணம்: வருமானம் அதிகம்; சேமிப்பு அதிகரிக்கும்.
ஆரோக்கியம்: நலமாக இருப்பீர்கள்

**துலாம்**
பணி: திறமையை வெளிப்படுத்தி அங்கீகாரம் பெறுவீர்கள்.
குடும்பம்: அன்பான உறவு.
பணம்:வருமானம்அதிகம்;செலவுகள்திட்டமிடுங்கள்.
ஆரோக்கியம்: தலைவலி ஏற்படலாம்; மன அழுத்தம் தவிர்க்கவும்.

**விருச்சிகம்**
பணி: பணிகள் அதிகம்; திட்டமிட்டு செயல்பட வேண்டும்.
குடும்பம்: துணையுடன் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள்.
பணம்: வருமானம் குறைவு; செலவுகளை கட்டுப்படுத்தவும்.
ஆரோக்கியம்: தோல் பிரச்சனைகள் ஏற்படலாம்; உணவில் எச்சரிக்கை.

**தனுசு**
பணி: பணிகள் அதிகம்; திட்டமிட்டு செயல்பட வேண்டும்.
குடும்பம்: துணையுடன் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளுங்கள்.
பணம்: வருமானம் குறைவு; செலவுகள் அதிகம்.
ஆரோக்கியம்: சளி பிரச்சனை ஏற்படலாம்; குளிர் உணவுகளை தவிர்க்கவும்.

**மகரம்**
பணி: திறமையை வெளிப்படுத்தி பாராட்டு பெறுவீர்கள்.
குடும்பம்: துணையுடன் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள்.
பணம்: வருமானம் அதிகம்; சேமிப்பு அதிகரிக்கும்.
ஆரோக்கியம்: நலமாக இருப்பீர்கள்.

**கும்பம்**
பணி: நேர்மையாக நடந்து கொள்ளுங்கள்; பாராட்டு பெறுவீர்கள்.
குடும்பம்:துணையுடன்நட்பாகநடந்துகொள்ளுங்கள்.
பணம்: வருமானம் அதிகம்; சேமிப்பு அதிகரிக்கும்.
ஆரோக்கியம்: நலமாக இருப்பீர்கள்.

**மீனம்**
பணி: பணிகள் அதிகம்; சக பணியாளர்களின் உதவியுடன் முடிக்கலாம்.
குடும்பம்: துணையுடன் விட்டு கொடுத்து நடந்து கொள்ளுங்கள்.
பணம்: வருமானம் திருப்திகரமாக இருக்கும்; குடும்ப தேவைகளை பூர்த்தி செய்யலாம்.
ஆரோக்கியம்: சில சிறிய பிரச்சனைகள் ஏற்படலாம்; கவனம் தேவை.

# குன்னூர் சிம்ஸ் பூங்காவில் கண்காட்சிக்கு வைக்கப்பட்ட 4 டன் பழங்கள் அகற்றும் பணி தீவிரம்

நீலகிரி, ஜூன் 3

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை சீசனை முன்னிட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் கோடை விழா நடத்தப்படுகிறது. இதையொட்டி பல்வேறு கண்காட்சிகள் நடத்தப்படுகிறது. அதன்படி இந்தாண்டும் கோடைவிழாவையொட்டி மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி உள்ளிட்டவை நடைபெற்றன.



இதில் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 65வது பழக் கண்காட்சி கடந்த 23ந் தேதி தொடங்கி 3 நாட்கள் நடைபெற்றது. இதில் மொத்தம் 4 டன் பழங்களால் பல்வேறு உருவங்கள் அலங்கரிக்கப்பட்டன. இதனை ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து கண்டு ரசித்து உற்சாகம் அடைந்தனர்.

இதைத்தொடர்ந்து மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கி பல்வேறு பாதிப்பை ஏற்படுத்தியதால் பழக்கண்காட்சியின் இறுதி நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. மேலும் தொடர் மழை காரணமாக மழைநீர் தேங்கி குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நடவு செய்யப்பட்டிருந்த 5 லட்சம் மலர் செடிகள் அழுக தொடங்கின. அது மட்டுமின்றி பழக் கண்காட்சியில் இடம்பெற்ற உருவ அலங்காரங்களில் உள்ள பல்வேறு பழங்களும் அழுக தொடங்கின.

இந்நிலையில் உருவ அலங்காரங்களில் உள்ள அனைத்து பழங்களையும் அகற்றும் பணியில் தோட்டக்கலைத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேலும் அவைகளை உரமாகவும், விதைகளை சேகரித்து நாற்றுகள் தயாரிக்கவும் தோட்டக்கலைத்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

# எடப்பாடி பழனிசாமி, அண்ணாமலை குறித்து விமர்சனம்: ஆதவ் அர்ஜூனா வீடியோவால் பரபரப்பு

சென்னை, ஜூன் 3

சமூக வலைத்தளத்தில் த.வெ.க. தேர்தல் பிரசார மேலாண்மை செயலாளர் ஆதவ் அர்னாஜுனாவும், கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்தும் புல்வெளியில் பேசியபடியே நடந்து செல்லும் ஒரு வீடியோ வைரலாகி வருகிறது. அந்த புல்வெளியில் நடந்தபடியே வரும் ஆதவ் அர்ஜூனா தமிழக அரசியல் கூட்டணி தொடர்பாக பேசுகிறார். அவருடன் வரும் புஸ்சி ஆனந்த் அதற்கு பதில் எதுவும் தெரிவிக்காமல், 'ம்.., ம்...' சொல்லியபடியே வருகிறார்.

இந்த வீடியோவில் ஆதவ் அர்ஜுனா, 'அண்ணாமலையாச்சும் 10 பேரை வச்சிக்கிட்டு, தேர்தலில் நின்னு 18, 20 சதவீதம் வாக்கு வங்கி வச்சியிருக்காரு, இங்கே எடப்பாடியை நம்பி கூட்டணிக்கு யாரும் வர்ற மாதிரி தெரியல, பா.ஜனதாவே அ.தி.மு.க.வை கூட்டணியில் இருந்து கழற்றி விடும் என்று கூறுகிறார். இதற்கு புஸ்சி ஆனந்த் பதில் ஏதும் கூறாமல் சிரித்துக்கொண்டே செல்கிறார்.

இந்த வீடியோ முழுமையாக இல்லாமல் எடிட் செய்யப்பட்டது போல் இடை, இடையே சில பதிவுகளாக வருகிறது. பா.ஜனதா, அ.தி.மு.க.வை விமர்சனம் செய்வது போல் உள்ள இந்த வீடியோ அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆதவ் அர்ஜுனாவின் பேச்சுக்கு நடிகர் பாலாஜி கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து நடிகர் பாலாஜி வெளியிட்டுள்ள வீடியோ பதிவில்,

இன்றைக்கு (அதாவது நேற்று) ஒரு வீடியோ பார்த்தேன். அது மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது. என்னவென்றால் நமது மதிப்பிற்குரிய எடப்பாடி பழனிசாமியை, தவெகவில் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஆதவ் அர்ஜுனா ஒருமையில் பேசியுள்ளார். இதனை பொதுச்செயலாளராக இருக்கு புஸ்ஸி ஆனந்தும் இப்படி பேசக்கூடாது என ஒருவார்த்தைக் கூட கூறவில்லை. கட்சியில் நடக்கும் பிரச்சினைகளை தவெக தலைவர் விஜய் நேரடியாக கண்காணித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அதில் தெரிவித்துள்ளார்.

# 'ஒருகட்டத்தில் சினிமாவை விட்டே போய்விடலாம் என நினைத்தேன்' நடிகர் உதயா



தமிழில்பலபடங்கள்நடித்துள்ளஉதயா, பிரபலதயாரிப்பாளர்ஏ.எல்.அழகப்பனின் மகன் ஆவார். இவரது சகோதரர் ஏ.எல்.விஜய் தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனராக இருக்கிறார்.

இதற்கிடையில் உதயா 'அக்யூஸ்ட்' என்ற படத்தை கதாநாயகனாக நடித்து தயாரித்துள்ளார். பிரபு ஶ்ரீநிவாஸ் இயக்கியுள்ள இந்த படத்தில் உதயாவுடன் முதன்முறையாக அஜ்மல், யோகிபாபு இணைந்து நடித்துள்ளனர். பிரபல கன்னட நடிகை ஜான்விகா நாயகியாக நடித்துள்ளார். இப்படம் விரைவில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், சென்னையில் நடந்த இப்படத்தின் விழாவில் உதயா பங்கேற்று பேசும்போது, ''சினிமாவில் நடிக்க வந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டது. இது என் பாக்கியம். எனது தாயார் கடவுளாக இருந்து என்னை வழிநடத்துகிறார். என்னை அவர் எங்கிருந்தோ பார்த்துக் கொண்டே தான் இருக்கிறார் என்று நம்புகிறேன்.

நான் நிறைய சோதனைகளை சந்தித்து வந்திருக்கிறேன். ஒருகட்டத்தில் சினிமாவை விட்டே போய் விடலாம் என்று கூட யோசித்திருக்கிறேன். ஆனால் எனது தன்னம்பிக்கை காரணமாகவே இந்த இடத்தில் நிற்கிறேன். நம்பிக்கையுடன் உழைத்தால் வெற்றி நிச்சயம்'', என்றார்.

ஏ.எல்.அழகப்பன் பேசும்போது, ''எனது மகன்களின் முயற்சிகளுக்கு நான் ஆதரவாக நின்றாலும், அவர்களின் முடிவுகளில் நான் தலையிட மாட்டேன். அதுதான் அவர்களை தனிப்பட்டு செயல்பட வைத்திருக்கிறது'', என்றார்.

# கொஞ்சம் தள்ளி போய் விளையாடுங்க ராஜா.. குபேரா இசை வெளியீட்டு விழாவில் தனுஷ் ஆவேச பேச்சு

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகரான தனுஷ், தற்போது இயக்குனர் சேகர் கம்முலா இயக்கத்தில் 'குபேரா' படத்தில் நடித்துள்ளார். இந்தபடமானது மும்பைதாராவியை மையமாகவைத்து அரசியல்திரில்லர்ஜானரில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதில்நாகார்ஜுனா, ராஷ்மிகாமந்தனாஜிம்சரப்உள்ளிட்டோர்முக்கியகதாபாத்திரங்களில்நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில்உருவாகியுள்ளஇப்படம் வருகிறஜூன்20ம்தேதி வெளியாகஉள்ளது. இந்தநிலையில், நேற்று இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்றது.

இசை வெளியீட்டு விழாவில் பேசிய நடிகர் தனுஷ் தன்னை பற்றி வதந்தி பரப்புபவர்களுக்கு பதிலடி கொடுத்து இருக்கிறார். அதாவது, நீங்கள் எனக்கு எதிராக எவ்வளவு வேணாலும் வதந்திகள் பரப்பலாம். எதிர்மறையான விஷயங்களை கிளப்பலாம். ஒவ்வொரு படமும் ரிலீஸ் ஆகும் ஒன்றரை மாதம் முன்பு என்னைப்பற்றி நெகட்டிவிட்டி பரப்புங்க. தம்பிங்களா கொஞ்சம் தள்ளி போய் விளையாடுங்க ராஜா. இங்க இந்த சர்க்கஸ் எல்லாம் வேண்டாம்.

இங்க இருக்குறவங்க என் ரசிகர்கள் கிடையாது, 23 வருஷமா என் கூடவே வந்த வழித்துணைகள். நீங்க சும்மா ஒரு 4 வதந்தியை பரப்பி என்னை காலி பண்ணிடனும்னு நெனச்சா அதை விட முட்டாள்தனம் எதுவுமே கிடையாது. ஒரு செங்கலை கூட ஆட்ட முடியாது" என்று ஆவேசமாக பேசினார்.

மேலும், இசை வெளியீட்டு நிகழ்ச்சிக்கு வந்த ரசிகர்களுக்கு அறிவுரை கூறினார். அதாவது, எண்ணம் போல் வாழ்க்கை. எண்ணம் போல் தான் வாழ்க்கை. மகிழ்ச்சியா இருங்க. சந்தோஷத்தை வெளிய தேடாதீங்க. அது உங்களுக்கு உள்ளே தான் இருக்கு. நிம்மதி, சந்தோஷத்துக்கு மேல எதுவும் முக்கியம் இல்லை. இவ்வளவு வருஷமா, எல்லாரும் இவ்வளவும் பேசும் போதும், அதைத்தாண்டி எல்லாரும் என்கூட இருக்கீங்க. நான் ரொம்ப கொடுத்து வைச்சு இருக்கணும். நிறைய ஊர்ல இருந்து எல்லாரும் வந்து இருக்கீங்க. வீட்டுக்கு பாதுகாப்பா போங்க. பைக்ல என்னை பின்தொடர வேண்டாம். அதை நான் ஆதரிக்க மாட்டேன். உங்களோட சந்தோஷத்தை விட பாதுகாப்பு தான் முக்கியம்." என்று தெரிவித்துள்ளார்.

# தமிழில் நல்ல ஸ்கிரிப்ட் கிடைச்சா ஓடோடி வந்துடுவேன் ராஷ்மிகா மந்தனா



தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'குபேரா' படம் வரும் 20ம் தேதி வெளியாகிறது. தனுஷின்51வதுதிரைப்படமான'குபேரா'படத்தைஇயக்குனர் சேகர் கம்முலா இயக்கியிருக்கிறார். இந்தப் படத்தில் தனுஷிற்கு ஜோடியாக ராஷ்மிகா மந்தனா நடித்திருகிறார். மேலும் தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகரான நாகார்ஜுனா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. இசை வெளியிட்டு விழாவில் கலந்து கொண்ட ராஷ்மிகா மந்தனா செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நீங்க எல்லோரும் ரொம்ப ஆதரவு கொடுத்துட்டு இருக்கீங்க. தமிழ் படங்களில் அதிகம் பார்க்க முடியவில்லை என்று கேட்கிறீர்கள். நானும் காத்துக்கொண்டுதான் இருக்கிறேன். தமிழில் நல்ல கதை கிடைத்தால் ஓடோடி வந்து இருக்கிறேன். கதாநாயாகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் நடிக்க விருப்பம் உள்ளதா என்று கேட்கிறீர்கள். எனக்கு கதைதான் முக்கியம். நல்ல கதை இருந்தால் நடிப்பேன். எனக்கு தமிழ், தெலுங்கு, இந்தி என மொழி வித்தியாசம் கிடையாது. அதுபோல, பான் இந்தியா, ரீஜினல் என வித்தியாசம் பார்க்கமாட்டேன். கதை நன்றாக இருந்தால் நடிப்பேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து மேக்ஸ்வெல் ஓய்வு



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ஆல்ரவுண்டர் கிளென் மேக்ஸ்வெல், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். இந்தியா மற்றும் இலங்கையில் அடுத்தாண்டு நடைபெறவுள்ள டி20 உலகக் கோப்பைக்கு கவனம் செலுத்தும் வகையில், ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறும் முடிவை மேக்ஸ்வெல் எடுத்திருக்கிறார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகம் ஆன மேக்ஸ்வெல், இதுவரை 149 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார்., 3,990 ரன்கள் குவித்து, 77 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். மேலும், 2015 மற்றும் 2023 ஒருநாள் உலகக் கோப்பை வென்ற ஆஸ்திரேலியா அணியில் இடம்பெற்று, கோப்பையை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார்.

ஒருநாள்போட்டிகளில்அவரதுசராசரி33.81ஆகும். ஸ்டிரைக்ரேட்126.70ஆகஉள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு எதிராக கடந்த 2023 உலக கோப்பை தொடரின் போது 201 ரன்களை அடித்து தனி ஒரு நபராக அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றார். ஒருநாள் போட்டி வரலாற்றில் மிகச்சிறந்த ஆட்டங்களில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

மூன்று சதங்கள், 23 அரைசதங்களை மேக்ஸ்வெல் அடித்துள்ளார். மேக்ஸ்வேல் பேட்டிங் ஸ்டைலுக்கு என்றே தனி ரசிகர் பட்டாளம் உள்ளது. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற போட்டியே மேக்ஸ்வெல் விளையாடிய கடைசி ஒருநாள் போட்டியாகும். இந்தப்போட்டியில் 7 ரன்களில் ஆட்டமிழந்தார். மேக்ஸ்வெல்லின் திடீர் ஓய்வு அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# நார்வே செஸ்: கார்ல்சனை வீழ்த்திய குகேஷ்




நார்வே கிளாசிக்கல் சர்வதேச செஸ் போட்டி அங்குள்ள ஸ்டாவஞ்சர் நகரில் நடந்து வருகிறது. இதில் ஓபன் பிரிவில் நடப்பு உலக சாம்பியன் குகேஷ் (இந்தியா), 5 முறை உலக சாம்பியன் மாக்னஸ் கார்ல்சென் (நார்வே), அர்ஜூன் எரிகைசி (இந்தியா) உள்பட 6 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் ஒவ்வொரு வீரரும், மற்றவர்களுடன் தலா 2 முறை மோத வேண்டும் இந்நிலையில், நார்வே செஸ் தொடரில் இன்று நடந்த 6வது சுற்றி ஆட்டத்தில் நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனை இந்தியாவின் குகேஷ் எதிர்கொண்டார். உலகின் நம்பர் 1 செஸ் வீரராக உள்ள கார்ல்சனுக்கும் உலக செஸ் சாம்பியன் குகேசுக்கும் இடையேயான ஆட்டம் மிகுந்த எதிர்பார்ப்பை எழுப்பியது. பரபரப்பாக நடந்த ஆட்டத்தில் கார்ல்சனை 30 என்ற கணக்கில் வீழ்த்தி குகேஷ் அபார வெற்றிபெற்றார். இந்த தொடரில் இரு வீரர்களும் மோதிய முதல் ஆட்டத்தில் கார்ல்சன் வெற்றிபெற்ற நிலையில் இந்த ஆட்டத்தில் குகேஷ் வெற்றிபெற்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம் நார்வே கிளாசிக்கல் சர்வதேச செஸ் புள்ளி பட்டியலில் 8.5 புள்ளிகளுடன் குகேஷ் 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். அதேவேளை, 9.5 புள்ளிகளுடன் கார்ல்சன் 2வது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரேயாஸ் ஆடிய விதம் மிகவும் சிறப்பாக இருந்தது ஹார்திக் பாண்ட்யா

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற 2வது தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஹார்திக் தலைமையிலான மும்பை மற்றும் ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த மும்பை 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 203 ரன்கள் எடுத்தது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக திலக் வர்மா, சூர்யகுமார் யாதவ் தலா 44 ரன்கள் எடுத்தனர். தொடர்ந்து 204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த பஞ்சாப் அணி 19 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 207 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் பஞ்சாப் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. நாளை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் பெங்களூரு அணிகள் மோத உள்ளன. இந்நிலையில், இந்த போட்டியில் தோல்வி கண்ட பின்னர் மும்பை கேப்டன் ஹார்திக் பாண்ட்யா அளித்த பேட்டியில் கூறியதாவது, ஸ்ரேயாஸ் ஆடிய விதம் மிகவும் சிறப்பாக இருந்தது. இதனால் நாங்கள் இன்று தோல்வியை தழுவி விட்டோம். தனக்கு கிடைத்த வாய்ப்பை அவர் சிறப்பாக பயன்படுத்திக் கொண்டு விளையாடி இருக்கிறார். நாங்கள் அடித்த ரன் இந்த ஆடுகளத்திற்கு சரியான இலக்கு தான். ஆனால், எங்கள் பந்து வீச்சு படை திட்டங்களை சரியான முறையில் களத்தில் செயல்படுத்தவில்லை. பஞ்சாப் அணி கொஞ்சம் கூட பதற்றம் அடையாமல் அமைதியாக களத்தில் இருந்து எங்களை நெருக்கடியில் ஆளாக்கினார்கள். எங்கள் திட்டத்தை நாங்கள் நினைத்தது போல் சரியாக செயல்படுத்த முடியவில்லை. பும்ரா எங்களை பல்வேறு போட்டிகளில் நெருக்கடியான கட்டத்தில் காப்பாற்றி இருக்கிறார். ஆனால் அவரால் கூட இன்று முடியவில்லை. ஒருவேளை பும்ராவை இன்னும் முன்பாக நான் பந்து வீச வைத்திருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். இறுதி போட்டிக்கு போக முடியாதது நிச்சயம் ஏமாற்றத்தை அளிக்கின்றது. எங்கள் அணி வீரர்கள் இந்த தொடர் முழுவதும் சிறப்பாக செயல்பட்டார்கள். அவர்களுக்கு என்னுடையவாழ்த்துக்களைதெரிவித்துக்கொள்கின்றேன். பஞ்சாப்அணிக்கும்என்னுடையமனமார்ந்தவாழ்த்துக்கள். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.